**ஹம்பந்தோட்டை பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹம்பாந்தோட்டை பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, ஹம்பாந்தோட்டை பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது ரூபா 5,723,490 தொகைக்கான மூலதனச் செலவுகள் மீண்டுவரும் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால், மூலதனச் செலவுகள் அப் பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | | செலவுகள் சரியாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிர்மாண வேலை கடன்பட்டோர் மீதியில் மிகை மதிப்பீடு செய்தல் மற்றும் கொடுப்பனவு பூர்த்தி செய்யப்பட்ட 06 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 3,535,082 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | கடன்பட்டோர் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுப்பெறுமதி ரூபா 1,622,643 தொகைக்கான பொருட் பதிவேட்டில் பதியப்பட வேண்டிய 573 பண்ட அலகுகள் நடைமுறை அல்லாத சொத்துக்கள் என மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | 2022 ஆண்டின் இறுதிக் கணக்குகளின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பொருட் பதிவேட்டுப் பொருட்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அதிகாரப் பிரதேசம் அல்லாத பெரகம வீதி வீத வரி அதிகாரப் பிரதேசத்தில் இருந்து பெற வேண்டிய ரூபா 105,769 தொகைக்கான வீதவரி பெற வேண்டிய மீதியொன்றென மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | பெற வேண்டிய வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 78,045 பெறுமதியான 645 லீற்றர் டீசல் இறுதி இருப்பென கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2022 ஆண்டின் இறுதிக் கணக்குகளின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இறுதி இருப்பு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள கூட்டுத்தொகை ரூபா 20,881,317 தொகைக்கான 03 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே கூட்டுத்தொகை ரூபா 24,230,835 இற்கான சமமின்மைகள் காணப்பட்டது. | ஒப்பந்த வேலைகளுக்கான வைப்புக்களின் வித்தியாசத்தை ஏற்றுக் கொள்கின்றேன், முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணத்துக்காக ஆளுனரின் அங்கீகாரத்தை பெற்று ஏடுகளில் இருந்து அகற்றுகின்றேன். | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்ய வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 44,442,002 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 3,698,785 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டிற்காக 913 வீதவரி அலகுகளில் இருந்து பெற வேண்டிய வீதவரி ரூபா 890,175 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்காததுடன், நிலுவைத் தொகையில் ரூபா 165,490 தொகை அரச நிறுவனங்களில் இருந்து பெற வேண்டிய மீதி ஒன்று ஆகும். | வெளிக்கள நாட்களைப் பயன்படுத்தி நிலுவை வீதவரியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் எனவும், அரச ஆதனங்களில் இருந்து பெற வேண்டிய நிலுவைத் தொகையை செலுத்தும் படி கடிதம் மூலம் அறிவித்தேன். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமான 12 கடையறைகளுக்காக பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2018 ஜனவரி 26 திகதிய பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் படி வாடகை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்காமல் 2018 மே 18 திகதிய சபைத் தீர்மானத்தின் மீது வாடகை அறவிடப்பட்டமையால் 2018 ஆண்டு ஜூலை மாதம் முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை சபை இழந்திருந்த வாடகை வருமானம் ரூபா 604,000 ஆக இருந்தது. | 2018 ஆண்டின் போது கிடைக்கப் பெற்ற பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை பொதுக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளாமல் சபைத் தீர்மானத்தின் படி வாடகை அறவிடப்பட்டதெனவும், 2022 ஆண்டில் இருந்து புதிய பெறுமதி மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவ் அறிக்கை இதுவரை சபைக்கு கிடைத்திருக்கவில்லை என அறிவிக்கின்றேன். | சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |

### 3.2 விளைவற்ற அல்லது குறை பயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சேதனப் பசளை செயற்களத்திற்காக ரூபா 671,000 பெறுமதியான பல்கரும துண்டாக்கும் இயந்திரம் ஒன்று மற்றும் ரூபா 930,600 தொகைக்கான சேதனப் பசளை அரிக்கும் இயந்திரம் 2021 திசெம்பர் 15 திகதி கொள்வனவு செய்திருந்ததுடன் அந்த இயந்திரங்களின் உத்தரவாத காலம் 06 மாதங்களாக இருப்பதனால் கணக்காய்வுத் திகதியாகிய 2022 ஜனவரி 12 திகதி அளவிலும் அந்த இயந்திரங்களை பொருத்தி பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த இயந்திரத்தை பயன்படுத்துவதற்காக மூன்று அவத்தை மின்சாரம் பெற்றுத் தருமாறு இலங்கை மின்சார சபைக்கு விண்ணப்பித்துள்ளதுடன், மின்சாரத் தொடர்பு கிடைத்திருக்காமையால் இது வரை செயற்படுத்துவதற்கு முடியாமல் போனது என அறிவிக்கின்றேன். | சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். |

### 3.3 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மயுரபுர வாராந்த சந்தையில் வாகனத் தரிப்பிடம் நிர்மாணிக்கும் நிர்மான வேலை 2021 செப்தெம்பர் 09 திகதி ரூபா 7,902,800 தொகைக்காக உடன்படிக்கை மேற்கொண்டு 2021 திசெம்பர் 07 திகதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த நிர்மாண வேலையின் 46 சதவீதம் பூர்த்தி | இந்த செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் பாதையில் காணப்பட்ட மின்சாரக் கம்பங்களை அகற்றுவதற்காக குறிப்பிட்ட காலம் கடந்திருந்தல், தொழிலாளர்கள் பெற்றுக் கொள்ளும் வசதியீனம், மூலப் | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்ததுடன், கணக்காய்வுத் திகதியாகிய 2022 ஜனவரி 12 திகதியளவிலும் கூட்டுப் பெறுமதி ரூபா 4,221,337 தொகைக்கான 08 வேலை விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பொருள் கட்டுப்பாடு காரணமாக செயற்திட்டம் குறிப்பிட்ட தினத்தில் பூர்த்தி செய்வதற்கு முடியாமல் போனதென அறிவிக்கின்றேன். | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது சபையினால் ரூபா 465,253 தொகை செலவிடப்பட்டு சரளைக் கற்கள் போட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட ஜூல்பல்லம திரு. விலமசேன அவர்களின் வீட்டுக்கு அண்மையால் செல்லும் பாதை ஒரு இலட்சம் கிலோ மீற்றர் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காபட் மூலம் செப்பனிடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தமையால் சபை நிதியில் இருந்து மேற்கொள்ளப்பட்டிருந்த முழுச் செலவும் பயனற்ற செலவொன்றாகியுள்ளது. | நிர்மாண வேலையை செயற்படுத்துவதற்கு 2021 பெப்ரவரி மாதம் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது எனவும் ஒரு இலட்சம் கிலோமீற்றர் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இந்தப் பாதையை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக சபை அறிந்திருக்கவில்லை. | செயற்திட்டங்கள் தெரிவு செய்தல் முறையான ஆய்வின் படி மேற்கொள்ள வேண்டும். |